1983 மார்ச் 8]

மோட்டார் வாகனங்களுக்கு குறிப்பிட்ட எண் கிடைக்க வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணம்

*வினா எண். 321—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட எண் தங்களுக்கு கிடைக்கக் கோரினால் சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) ரூ. 100 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவர் அவர்களே, வண்டிகளின் எண்களைப் பொறுத்தவரையிலே அதிர்ஷ்டத்தின் அடிப்படையிலும் அந்த எண்களைக் கூட்டுவதால் உண்டாகும் எண் குறிப்பிட்ட ஒரு எண்ணாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் சிலர் அந்த எண்களைப் பெறுவதற்கு விரும்புகிறார்கள். எனவே அப்படிப்பட்ட எண்களைப் பொது ஏலத்தின் மூலம் கொடுத்தால் அதனால் அரசுக்கு அதிக வருமானம் வரும். எனவே அவ்வாறு அரசுக்கு அதிக வருமானம் வருகின்ற வகையிலே அந்த எண்களைப் பொது ஏலத்தில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் எல்லாவற்றையும் ஏலம் போட்டுக் கொண்டிருக்க முடியாது. சிலவற்றை சில நன்மைகளைக் கருதி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் எல்லாவற்றையும் ஏலம் போட முடியாது. ஆனால் ஸ்பெஷல் எண்களை வாங்குவதற்கு 100 ரூபாய் என்ற கட்டணம் மிகவும் குறைவு. 80,000 ரூபாய் ஒரு இலட்சம் ரூபாய் என்று பணம் கொடுத்து வண்டிகளை வாங்குகின்றபோது இந்த கட்டணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. எனவே இதனை 100 ரூபாய் என்பதற்குப் பதிலாக 500 ரூபாய் என்று மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது குறித்து நிதித்துறை தேவையான நேரத்தில் ஆய்வு செய்யும் என்று கருதுகிறேன்.